# ஜனாஸா நல்லடக்கத்தின் விதிகள்

*இந்த உலகம் ஒரு சோதனைக்கான களம். அல்லாஹ் தஆலா வாழ்க்கை மற்றும் மரணத்தைப்பற்றி கூறும் வகையில் கூறுகின்றான்:*

ٱلَّذِى خَلَقَ ٱلْمَوْتَ وَٱلْحَيَوٰةَ لِيَبْلُوَكُمْ أَيُّكُمْ أَحْسَنُ عَمَلًا ۚ وَهُوَ ٱلْعَزِيزُ ٱلْغَفُورُ ﴿٢﴾ (الملك 2)

*பொருள்: உங்களில் யார் மிகச் சிறந்த செயல் புரியக்கூடியவர் என்று உங்களைச் சோதிக்கும் பொருட்டு அவன் மரணத்தையும் வாழ்வையும் ஏற்படுத்தினான் (அல் முல்க்:2)*

வாழ்க்கை என்பது தனக்காக ஒன்றைச் செய்துகொள்வதற்கான அவகாசம் மற்றும் மரணம் அந்த அவகாசத்தின் இறுதி. இந்த அவகாசம் இறுதியாக ஒருநாள் முடியத்தான் போகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَيُؤَخِّرْكُمْ إِلَىٰٓ أَجَلٍ مُّسَمًّى ۚ إِنَّ أَجَلَ ٱللَّهِ إِذَا جَآءَ لَا يُؤَخَّرُ ﴿٤﴾ (نوح: 4)

*பொருள்: மேலும், ஒரு நிர்ணயிக்கப்பட்ட காலம்வரையில் உங்களை விட்டு வைப்பான். நிச்சயமாக அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்ட நேரம் வந்து விட்டால் அது ஒத்திவைக்கப்பட மாட்டாது* (நூஹ்:4)

இந்த வாழ்க்கையின் முடிவு எப்போது வரும் மற்றும் மரணத்தின் உறுதியான பிடி எப்போது ஒருவனைப் பிடித்துக்கொள்ளும் என்பது யாருக்குமே தெரியாது. ஒன்று நிச்சயம், அந்த நேரம் வந்து விடுமேயானால் அதனை யாராலும் தடுத்துநிறுத்தவோ தள்ளிப்போடவோ முடியாது. இது எவ்வகையான உண்மை என்றால், இதற்கு எந்த ஒரு ஆதாரமோ சான்றோ அளிக்கத் தேவையில்லை. ஏனெனில், நாள்தோறும் நாம் காணும் காட்சியாகவே உள்ளது. மாபெரும் நாத்திகர்களும் இதனை உறுதியுடன் நம்புகின்றனர். ஒரு மனிதன் நல்லவனாகவும் நேர்மையானவனாகவும் இருந்து அவனுடைய நம்பிக்கை மற்றும் கொள்கை சீரானதாகவும் அவன் நல்ல காரியங்களைச் செய்பவனாகவும் இருப்பானேயானால், இந்த மரணம் அவனுக்கு அதற்கான பிரதிபலன் மற்றும் நற்கூலியைப் பெறுவதற்கான, வெற்றிக்கான வாய்ப்பாகும். மாறாக, அவனுடைய கொள்கையும் நம்பிக்கையும் தவறானதாகவும் அவனுடைய செயல்கள் தீயவையாகவும் இருக்குமேயானால், இதே மரணம் அவனுக்கு நிரந்தர வேதனைக்கான ஆரம்பக் கட்டமாக மாறிவிடும்.

மனிதன் ஒருபோதும் மரணத்தை விரும்பிக்கேட்கக் கூடாது, இறைத்தூதர் ﷺ அவர்கள் அவ்வாறு செய்வதை வெறுக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில்

www.uzairfalahi.com

மனிதன் அவனுக்கு மரணமே வந்துவிட்டாலும் நன்றாயிருக்கும் என்று கருதலாம். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், உங்களில் எவரும் ஏதோ ஒரு கஷ்டத்தின் காரணமாக மரணத்தை விரும்பக்கூடாது, அவ்வாறு மரணத்தையே விரும்பக்கூடிய நிலைக்குத் தள்ளப்படும் கட்டாயம் வருமானால் அவர் இவ்வாறு துஆ கேட்கவேண்டும். என் இறைவனே, எதுவரையில் இந்த வாழ்க்கை எனக்கு நல்லதாக இருக்குமோ அதுவரை என்னை உயிருடன் வைப்பாயாக, மற்றும் எனக்கு எப்போது மரணமே நல்லதாக இருக்குமோ அப்போது எனக்கு மரணத்தைத் தருவாயாக (புக்ஹாரி, முஸ்லிம், அபூ தாவூத், நிசாயி).

## தற்கொலை செய்துகொள்வது ஹராமானதாகும்

ஹஜ்ரத் த்ஸாபிக் ஜ்தஹ்ஹாக் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள், எவரும் ஒரு இரும்புத்துண்டினால் (ஒரு ஆயுதம்) தன்னையே மாய்த்துக்கொள்வாரேயானால், அவருக்கு அதே இரும்புத்துண்டினால் நரகத்திலும் வேதனை கொடுக்கப்படும் (புக்ஹாரி). இஸ்லாம் மனிதர்களுக்கான கண்ணியத்தை வலியுறுத்துகின்றது. எவ்வகையில் அவனுடைய உலக வாழ்க்கையில் மரியாதை மற்றும் கண்ணியத்தைப் பற்றி வலியுறுத்துகின்றதோ, அதுபோன்றே, அவனுடைய மரணத்திற்குப் பின்பும் அவன் அதே விதமான மரியாதைக்குரியவன் என்று கருதுகிறது. இதன் காரணமாகவே, மற்ற மதத்தினர்களிடையே காணப்படும் வழக்கங்களுடன் மாறுபட்ட வகையில், மரணத்திற்குப்பின்பும் அவனுக்கு மரியாதை அளிக்கப்படும் வகையில் அறிவுறுத்தியுள்ளது. மரித்தவர்களைத் தகனம் செய்யவோ அல்லது கழுகுகளுக்கு இரையாகவோ ஆக்காமல், அவர்களைக் குளிப்பாட்டி, சுத்தமான துணி (கஃபன்) அணிவித்து, அவர்களுக்காக அல்லாஹ்விடம் துஆ கேட்டு நல்லடக்கம் செய்யுமாறு கட்டளையிடுகிறது. ஒருவர் மரணித்ததிலிருந்து அவரை நல்லடக்கம் செய்யும் வரை இஸ்லாத்தின் கட்டளைகளும் வழிகாட்டுதல்களும் இவ்வாறு உள்ளன.

மரணத்தருவாயில் மனிதன் மிகக் கஷ்டமான நிலையில் இருப்பான், அவன் துன்பத்தை அனுபவித்துக்கொண்டும் மறுஉலகத்தின் பல்வேறு விஷயங்களை உணர்ந்துகொண்டும் எதிர்கொண்டும் இருப்பான். இதனை மரண வேதனை அல்லது **சகராதுல் மவ்த்** என்று கூறுவார்கள்.

1 இந்நிலையில் ஒருவரை வலது பக்கவாட்டில் படுக்க வைக்கவேண்டும் மற்றும் அவருடைய முகத்தைக் ஃகிப்லாவின் புறமாக இருக்கும்படி செய்யவேண்டும்.

www.uzarfalahi.com

2 அவர் கலிமா ஷஹாதத் வாய்மொழியும் வகையில் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: لَقِّنُوْا مَوْتَاكُمْ لآ إِلٰهَ إِلاَّ اللهُ உங்களில் மரணத்தருவாயில் இருக்கும் ஒருவரை لآ إِلٰهَ إِلاَّ اللهُ கூறும் வகையில் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருங்கள் . (பெரும்பாலான முஹத்திஸீன்கள்).

3 மரணம் நெருங்கும் நிலையில், மரணத்தருவாயிலுள்ளவருக்கு அருகில் திருக்ஃகுர்ஆன் ஓதவேண்டும். சில மார்க்கச்சட்ட அறிஞர்கள் அத்தருணத்தில் **சூரா யாசீன்** ஓதவேண்டும் என்று கூறுகின்றனர். அவ்வாறே, **சூரா அர் ரஅது** ஓதுவதும் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது.

4 உடலிலிருந்து உயிர் பிரிந்துவிட்டபின், மரணித்தவருடைய கண்களை மூடிவிடவேண்டும், அவ்வாறே வாயும் திறந்தே இருக்குமானால் அது மூடிக்கொள்ளும் வகையில் அதனை மென்மையாகவும் கவனத்துடனும் லேசாகக் கட்டிவிடவேண்டும். பின்பு, உடலை ஒரு போர்வையினால் போர்த்திவிடவேண்டும்.

5 அவருடைய ஜனாசா தொழுகையிலும் நல்லடக்கத்திலும் அதிகமானவர்கள் கலந்துகொள்ளும் வகையில் மக்களுக்கு மரணச்செய்தியை அனுப்பவேண்டும்.

6 மரணித்தவருக்கான கஃபன் மற்றும் ஏற்பாடுகளை சீக்கிரமே செய்து முடிக்கவேண்டும். அவருடைய உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் கலந்துகொள்ளும் வகையில் சிறிது காலம் காத்திருக்கலாம், ஆனால், தேவையற்ற வகையில் தாமதிப்பது முறையானதல்ல.

7 ஒருவருடைய மரணச்செய்தியைக்கேட்டு அவருக்காக பாவமன்னிப்புக்கான துஆ செய்யவேண்டும் மற்றும் **இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்** சொல்லிக்கொண்டிருக்கவேண்டும்.

8 மரணித்தவர் எவருக்கும் கடன் கொடுக்கவேண்டியிருந்தால் அதனை விரைவில் திருப்பிச் செலுத்திடவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், "ஒரு முஃமினுடைய உயிர் அவன் கொடுக்கவேண்டியுள்ள கடனுடன் அது அவர் சார்பாகத் திருப்பிச்செலுத்தப்படாதவரையில் தொங்கிக்கொண்டிருக்கும் ".

* * *



www.uzairfalahi.com